சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு

2015-2016

மானியக் கோரிக்கை எண்.29

**எஸ்.பி. சண்முகநாதன்**

சுற்றுலாத்துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2015

# சுற்றுலா

## மானியக் கோரிக்கை எண்.29

## 2015–2016 ஆம் ஆண்டுக்கான
## கொள்கை விளக்கக் குறிப்பு

பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | சுற்றுலா – முன்னுரை | 1 |
| 2. | இந்தியாவில் சுற்றுலா | 3 |
| 3. | தமிழ்நாட்டில் சுற்றுலா | 4 |
| 4. | தமிழ்நாட்டிற்கு சுற்றுலா பயணிகள் வருகை | 6 |
| 5. | சுற்றுலா மேம்பாட்டு உத்திகள் | 8 |
| 6. | சுற்றுலா தலங்களை விளம்பரப்படுத்துதல் | 10 |
| 7. | கண்காட்சிகள் மற்றும் விழாக்கள் | 11 |
| 8. | பன்னாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல் | 14 |
| 9. | உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல் | 15 |
| 10. | விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தும் முகாம்கள் | 15 |
| 11. | தூய்மை முகாம்கள் | 16 |
| 12. | திறன் வளர்ப்புப் பயிற்சி (ஹுனார்–சே–ரோஜ்கார் தக்–யோஜ்னா) | 17 |
| 13. | மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம், துவாக்குடி,திருச்சிராப்பள்ளி | 17 |

| | | |
|---|---|---|
| 14. | சுற்றுலா வழிகாட்டி பயிற்சி | 19 |
| 15. | சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள் | 20 |
| 16. | இளைஞர் மற்றும் சாகச சுற்றுலா மேம்பாடு | 25 |
| 17. | மருத்துவச் சுற்றுலா மேம்பாடு | 26 |
| 18. | ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் சுற்றுலாத் திட்டங்கள் | 27 |
| 19. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | 31 |
| | ➢ உணவு விடுதிகள் பிரிவு | 31 |
| | ➢ படகு குழாம்கள் | 32 |
| | ➢ போக்குவரத்துப் பிரிவு | 34 |
| | ➢ பொருட்காட்சிப் பிரிவு | 34 |
| | ➢ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வர்த்தக முயற்சிகள் | 35 |
| | ➢ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின்–ஆளுமை தொடர்பான முன் முயற்சிகள் | 37 |
| | ➢ 2014–2015–ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்ட மேம்பாட்டுப் பணிகள் | 39 |
| 20. | 2015–2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பெரிய முன்முயற்சிகள் | 43 |
| 21. | நிதிநிலை செயல்பாடு | 45 |
| 22. | நிறைவுரை | 46 |

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு
2015-2016

மானியக் கோரிக்கை எண்.**29**

**எஸ்.பி. சண்முகநாதன்**
சுற்றுலாத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2015

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

# மானியக் கோரிக்கை எண். 29

# கொள்கை விளக்கக் குறிப்பு – 2015-2016

## முன்னுரை

இந்திய சுற்றுலாத்துறை ஒரு பெரிய முன்னேற்றத்தை கடந்த சில ஆண்டுகளில் பெற்றமைக்குக் காரணம் பொருளாதார வளர்ச்சி, வான் போக்குவரத்துக் கொள்கை, சாலைப் போக்குவரத்து வளர்ச்சி மற்றும் சுற்றுலா வசதிகள், வணிக ரீதியான பயண முன்னேற்றம் மற்றும் தகவல் தொழில் நுட்ப முறையிலான பயண முன்பதிவுகள் யாவும் மேம்பட்ட நிலைக்கு உயர்ந்ததே ஆகும். பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் உலகத்தரம் வாய்ந்த, இயற்கை எழில் மிகுந்த மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட கலாச்சார பெருமைமிக்க பல தனிச்சிறப்புகளைக் கொண்ட சுற்றுலா வளங்களை இந்தியா கொண்டுள்ளது.

இந்தியா போன்ற பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்துவரும் நாடுகளில் சுற்றுலா வளர்ச்சி ஒரு முக்கிய உந்து சக்தியாகத் திகழ்கிறது. வேலைவாய்ப்பு, வருவாய் ஈட்டுதல் மற்றும் அந்நிய செலாவணி வரவு போன்றவைகளில் சுற்றுலாவின் மேலோங்கிய பங்களிப்பு உள்ளது. சுற்றுலா என்பது மனமகிழ்வு, ஓய்வு, மத, குடும்ப அல்லது வணிக நோக்கங்களுக்காகவும், மருத்துவ, சாகச விளையாட்டு, கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகிய காரணங்களுக்காகவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேற்கொள்ளும் பயணமாகும்.

பொதுவாக, ஒரு நாட்டிற்குள்ளோ அல்லது நாட்டின் வெளியிலோ பயணிப்பது சுற்றுலா என கருதப்படுகிறது. ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு (UNWTO) ஓய்வு, வணிகம் மற்றும் பிறகாரணங்களுக்காக ஓராண்டிற்கு மிகாமல் தங்கள் வழக்கமான வாழ்க்கைச் சூழலில் இருந்து வெளியிடங்களுக்குச் சென்று தங்குபவரை **“சுற்றுலாப் பயணிகள்”** என வரையறுத்திருக்கிறது.

## இந்தியாவில் சுற்றுலா

இந்தியாவில் நிலவும் பொருளாதார மற்றும் சமூக சூழல்கள் காரணமாக பெருமளவு வளர்ச்சியை உள்நாட்டு சுற்றுலா கண்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் நாடு அடைந்துள்ள இந்த பொருளாதார வளர்ச்சி உயர்தர மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டும் மக்களுக்கு சுற்றுலா செல்ல ஏதுவாக வருமானத்தை சேமிக்க வழிவகுத்துள்ளது. அதிக எண்ணிக்கையில் வரும் சுற்றுலாப் பயணிகளால் தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகள்மீது அழுத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மைய அரசு அறிமுகப்படுத்தியுள்ள, 'வந்தவுடன் விசா' (Visa on arrival) என்ற திட்டம் வெளிநாட்டு பயணிகளின் வருகையை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் சுற்றுலாத் தொழில் பொருளாதார முக்கியத்துவம் பெற்று வேகமாக வளர்ந்து வருகிறது. உலக பயண மற்றும் சுற்றுலா அமைப்பு (W.T.T.C.) சுற்றுலாவின் மூலம் 2012 ஆம் ஆண்டில் இந்திய ரூபாய் மதிப்பில் 6.4 டிரில்லியன் அல்லது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.6 விழுக்காடு ஈட்டப்பட்டுள்ளது

என கணக்கிட்டுள்ளது. இந்தியாவில் சுற்றுலாத்துறை 39.5 மில்லியன் வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ளது. இது மொத்த வேலைவாய்ப்பில் 7.7 விழுக்காடாகும். 2013 முதல் 2023 ஆம் ஆண்டு வரை 7.9 விழுக்காடு என்ற ஆண்டு சராசரி வளர்ச்சி விகிதத்தில் சுற்றுலாத் தொழில் வளர்ச்சி அடையும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சி விகிதத்தினால் சுற்றுலா தொழிலில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளின் மத்தியில் அடுத்த பத்தாண்டுகளில் இந்தியா மூன்றாவது இடத்தினைப் பெறும். இந்தியாவிலுள்ள பரந்த மருத்துவ வசதிகள், மருத்துவ சுற்றுலாவை ஆண்டிற்கு சராசரி 30 விழுக்காடு வீதம் வளர்த்து 2015 ஆம் ஆண்டில் ரூ.95 பில்லியன் வருவாயை மருத்துவ சுற்றுலா எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாட்டில் சுற்றுலா

தமிழ்நாட்டில் கோயில்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், புனித தலங்கள், கடற்கரை வளாகங்கள், மலைப்பிரதேசங்கள், வனவிலங்கு சரணாலயங்கள், நினைவுச்சின்னங்கள், தொல்லியல் இடங்கள், கலை, கட்டிடக்கலை, இசை,

நாட்டியம் மற்றும் கைவினைப் பொருட்கள் போன்ற பல பிரபலமான சுற்றுலா சிறப்புகள் உள்ளன.

சமீப காலமாக சேவை பிரிவாக இருந்த தமிழக சுற்றுலாத்துறை ஒரு முக்கிய ஏற்றுமதி தொழில் துறையாக மாறி வருகிறது. சுற்றுலாவினை ''தொழில் துறை'' என அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மாநில அரசு சுற்றுலா பிரிவிற்கு நல்லூக்கத்தை அளித்து வருகிறது. சுற்றுலாத் துறையின் நோக்கமானது 2015 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் மிகவும் உயர்ந்த இடத்தை பெற வேண்டும் என்பது ஆகும். 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட **''தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை–2023''** என்ற ஆவணத்தில் சரியாக எடுத்தியம்பப்பட்டுள்ளது. இதில், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பிரிவிற்கு அரசு மற்றும் தனியார் மூலமாக ரூ.10,300 கோடி 2023 ஆம் ஆண்டிற்குள் முதலீடு செய்யப்படும் என கூறப்பட்டுள்ளது. மேலும், 2023 ஆம் ஆண்டில், 150 இலட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டைப் பார்வையிட இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


**2013** ஆம் ஆண்டில், தமிழ்நாடு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் முதல் இடத்தையும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இரண்டாம் இடத்தையும் பெற்றது. **2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகையில் முதலிடத்தை பெற்றுள்ளது.** உலகத்தரம் வாய்ந்த மருத்துவ வசதிகள் மற்றும் மருத்துவ நிபுணத்துவம் ஆகியவற்றால் தமிழ்நாடு **"மருத்துவ சுற்றுலா மையம்"** ஆக பிரகாசிக்கிறது. 2015-16 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்கவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் பெற்ற முதல் இடத்தைத் தக்கவைக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாட்டிற்கு சுற்றுலா பயணிகள் வருகை

முனைப்பான சுற்றுலா மேம்பாடு, சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றல், சுற்றுலாத் தலங்களில் அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் போன்றவைகளால்

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் வருகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் விவரம்:-

| ஆண்டு | உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை ( இலட்சத்தில்) | வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை ( இலட்சத்தில்) | மொத்தம் (இலட்சத்தில்) | வளர்ச்சி விகிதம் (விழுக் காட்டில்) |
|---|---|---|---|---|
| 2012 | 1841.37 | 35.62 | 1876.99 | 34.01 |
| 2013 | 2442.32 | 39.90 | 2482.22 | 32.24 |
| 2014 | 3275.55 | 46.58 | 3322.13 | 33.84 |




## சுற்றுலா மேம்பாட்டு உத்திகள்

"**தமிழ்நாடு – தொலைநோக்குப் பார்வை–2023**" ன் இலக்கினை எட்டும் விதத்தில் பின்வரும் மேம்பாட்டு உத்திகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன:–

- தமிழ்நாட்டை, **"அனைத்து பருவக் காலங்களுக்கும் – அனைத்து வருவாய் பிரிவினருக்கும் ஏற்ற சுற்றுலாத்தலம்"** ஆக நிலைப்படுத்துதல்.
- தமிழ்நாட்டை, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் சுற்றுலா நட்புறவு பேணும் மாநிலமாக முன்னிலைப்படுத்துதல்.
- தமிழ்நாடு, சுற்றுலாவின் **"மகிழ்வூட்டும் தமிழ்நாடு – நீங்களே உணருங்கள்!"** என்ற வர்த்தக சொற்றொடரைப் பிரபலப்படுத்துதல். இந்தியாவில் உள்ள அனைத்து சுற்றுலா வளமிக்க இடங்கள் மற்றும் அயல்நாடுகளில், **"தமிழ்நாட்டிற்குச் செல்வோம்! 2015–2016" (Destination Tamil Nadu)** என்ற சிறப்பு சந்தைப்படுத்துதல் விளம்பரங்களை பத்திரிகை, மின்னணு மற்றும் இதர ஊடகங்களின் வழியாக விளம்பரப்படுத்துதல்.
- சுற்றுலாப் பயணிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளான சிறந்த நெடுஞ்சாலை, இரயில் மற்றும் விமான வழித்தடங்களைத் தெரியப்படுத்துதல்.

- புகழ்வாய்ந்த சுற்றுலாத் தலங்களில், நெரிசலைக் குறைக்கும் வகையில், பிரபலமாகாத சுற்றுலா மையங்களைக் கண்டறிந்து மேம்படுத்துதல்.
- சுற்றுலா வளர்ச்சியின் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
- பொருட்காட்சிகள், விழாக்கள் மற்றும் பயணச் சந்தைகளில் பங்கேற்றல்.
- சுற்றுலா வழிகாட்டி பலகைகள் மற்றும் இணைப்பு சாலைகளை மேம்படுத்துதல்.
- தொடர் ஆய்வு மற்றும் திட்டமிடுதல் மூலமாக புதிய சுற்றுலா திட்டங்களை அமைத்து விரிவுபடுத்துதல்.

## சுற்றுலாத் தலங்களை விளம்பரப்படுத்துதல்

தமிழ்நாட்டின் பல்வேறு விதமான சுற்றுலா மற்றும் பாரம்பரிய வளங்கள், வளமான பண்பாடு மற்றும் பாரம்பரிய கலாச்சாரங்கள் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றது. பிற மாநிலங்களுக்கு இணையாக தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா சிறப்பிடங்கள் பெரிய அளவில் உலகம் முழுவதும்

விளம்பரப்படுத்தப்பட வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா வளங்கள், இந்தியாவின் அனைத்து முக்கிய மண்டலங்களிலும், வெளிநாடுகளிலும், பொருட்காட்சிகள் மற்றும் பயணச் சந்தைகளில் பங்கேற்றல் மூலமாக பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்படும்.

## கண்காட்சிகள் மற்றும் விழாக்கள்

தமிழ்நாடு முக்கிய கலாச்சார சுற்றுலா செல்லும் இடமாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் திருவிழாக்களின் மீது வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். கலை மற்றும் கைவினைப் பொருட்கள், பட்டு மற்றும் வாசனைப் பொருட்கள் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளால் பெரிதும் விரும்பப்படுகின்றன.

சுற்றுலா கண்காட்சிகள் மற்றும் விழாக்கள் சுற்றுலாப் பயணிகளை பெரிதும் ஈர்த்து வருகின்றன. உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வால்பாறை, ஏலகிரி, கொல்லிமலை, கல்வராயன்மலை, ஜவ்வாதுமலை மற்றும் மேகமலை ஆகிய மலைப்பிரதேசங்களில் கோடை விழாக்கள் நடத்தப்படுகின்றன.

தமிழகத்தின் பண்டைய கலாச்சாரத்தை எடுத்தியம்பும் வகையில், **2015–16** ஆம் ஆண்டில் கீழ்க்காணும் விழாக்கள் சுற்றுலாப் பயணிகள் மகிழ்வுரும் வகையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையால் தொடர்ந்து நடத்தப்பட உள்ளன :–

| | | |
|---|---|---|
| பொங்கல் சுற்றுலா விழா | – | சனவரி |
| சித்திரை முழுநிலவு திருவிழா, பூம்புகார் | – | மே |
| சலங்கை நாதம் மற்றும் பாகவத மேளா, தஞ்சாவூர் | – | மே |
| மாங்கனி திருவிழா, கிருஷ்ணகிரி | – | மே |
| அனைத்து மலைப்பிரதேசங்களில் கோடை விழா | – | மே |
| சாரல் திருவிழா, குற்றாலம் | – | ஜூலை |
| திற்பரப்பு விழா, கன்னியாகுமரி மாவட்டம் | – | ஜூலை |
| ஆடிப்பெருக்கு விழா, ஒகேனக்கல் | – | ஜூலை |
| அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் உலக சுற்றுலா தினம் | – | செப்டம்பர் |

| | | |
|---|---|---|
| சதய திருவிழா, தஞ்சாவூர் | – | அக்டோபர் |
| திருவண்ணாமலை தீபத் திருவிழா | – | நவம்பர் |
| தேயிலை சுற்றுலா விழா, உதகை | – | நவம்பர் / டிசம்பர் |
| வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீரங்கம் | – | டிசம்பர் / சனவரி |
| இந்திய நாட்டிய விழா, மாமல்லபுரம் | – | டிசம்பர் / சனவரி |

மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் வேலூரில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிகளில் கலந்து கொண்டு, தமிழ்நாட்டின் சுற்றுலா சிறப்பிடங்கள் மற்றும் அதிகம் பிரபலமடையாத சுற்றுலாத்தலங்கள் குறித்த விவரங்களை எடுத்தியம்பும் வகையில் சுற்றுலாத்துறையால் அரங்குகள் அமைக்கப்பட்டன. நமது மாநிலத்தின் செழுமையான சுற்றுலா வளங்களை வெளிப்படுத்தும் வகையில் நாடெங்கும் நடத்தப்பட்ட சுற்றுலா பயணச்சந்தைகள் மற்றும் பொருட்காட்சிகளில் சுற்றுலாத் துறை பங்கேற்று வருகிறது.

**பன்னாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல்**

பல்வேறு அரசுகளின் முக்கிய பிரதிநிதிகள், பயணம் மற்றும் விருந்தோம்பல் துறையைச் சேர்ந்த முகவர்கள் ஒரே கூரையின் கீழ் கூடும் வகையில் நடத்தப்படும் பன்னாட்டு பயணச் சந்தைகளில் சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு மற்றும் சேவைகள் குறித்து விளம்பரப்படுத்தும் வகையில் அமைகிறது. நமது செழுமையான சுற்றுலா வளங்களையும், வசதிகளையும் பிரபலப்படுத்தவும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை உயர்த்தவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாகும். எனவே, 2015–16 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கீழ்க்காணும் பன்னாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்க திட்டமிட்டுள்ளது :–

1. பன்னாட்டு சுற்றுலா சந்தை –ஆசியா (ITB-Asia - International Tourism Bourse) - சிங்கப்பூர் – செப்டம்பர்/அக்டோபர், 2015.
2. பசிபிக் ஆசிய பயண முகவர்கள் மாநாடு (PATA) – பெங்களூரு – செப்டம்பர், 2015.

3. ஜப்பான் ஆசிய பயண முகவர்கள் மாநாடு (JATA)–ஜப்பான்– செப்டம்பர், 2015.
4. ‘சர்வதேச பயணச் சந்தை’ (WTM) - லண்டன் - நவம்பர், 2015.
5. பன்னாட்டு சுற்றுலாத்தொழில் பொருட்காட்சி (FITUR) – மாட்ரிட் – சனவரி, 2016.

**உள்நாட்டு பயணச்சந்தைகளில் பங்கேற்றல்**

பிற மாநிலங்களின் சுற்றுலாத் துறைகள் மூலமாகவும், புகழ்பெற்ற முகமைகள் மூலமாகவும் நடத்தப்படும் சுற்றுலா பயணச்சந்தைகள் மற்றும் சுற்றுலா கண்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்று வருகிறது.

**விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தும் முகாம்கள்**

தமிழ்நாடு பல்வேறு சுற்றுலா வளங்களை பெருமளவில் தன்னகத்தே கொண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையால் தமிழ்நாடு பெற்ற முதல் இடத்தை தக்கவைக்கவும், தமிழ்நாட்டிற்கு அதிக

அளவில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கவும், சுற்றுலாப் பொருட்காட்சிகள் மற்றும் சாலைப் பொருட்காட்சிகள் தொடர்ந்து தமிழ்நாடு சுற்றுலாத்துறையால் நடத்தப்படுகிறது. **2014-2015** ஆம் ஆண்டில், ஜெய்ப்பூர், புதுதில்லி, மும்பை, அவுரங்காபாத், மற்றும் போபால் ஆகிய நகரங்களில் விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தும் முகாம்கள் நடத்தப்பட்டன. **2015-2016** ஆம் ஆண்டில் இந்த முகாம்கள் நாட்டின் இதர முக்கிய சுற்றுலாத் தலங்களிலும் நடத்தப்படவுள்ளன.

## தூய்மை முகாம்கள்

சுற்றுலாத் தலங்களில் தூய்மையைப் பேணுதல் மற்றும் சுகாதாரத்தைப் பராமரித்தல், சுற்றுலாத்துறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும், “தூய்மையைப் பேணும் முகாம்கள்’’ பத்து சுற்றுலாத்தலங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. **2015–2016** ஆம் ஆண்டில் பத்து சுற்றுலாத்தலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தூய்மை பேணும் முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

**திறன் வளர்ப்புப் பயிற்சி (ஹு-னார் –சே –ரோஜ்கார் தக்–யோஜனா)**

இந்திய அரசு சுற்றுலா அமைச்சகத்தின் உதவியுடன் சென்னை தரமணியிலுள்ள உணவக மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் சேவை புரிவோருக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

**மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி**

திருச்சிராப்பள்ளி, துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம் தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய அரசு உதவியுடன் இணைந்து நடத்தப்பட்டு வருகிறது. 2010–11 ஆம் ஆண்டு முதல் நொய்டாவில் உள்ள உணவக மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில் நுட்பவியலுக்கான தேசிய கவுன்சிலின் அங்கீகாரம் பெற்று பல்வேறு பாடத்திட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிறுவனத்தில், உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் பாடத்தில் மூன்றாண்டு பட்டப்படிப்பும் மற்றும் ஒன்றரை ஆண்டுகால பட்டயப்படிப்பும், உணவு தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிடப் பராமரிப்பு, அடுமனை பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் தயாரித்தல் ஆகிய பாடங்களில் ஓராண்டு சான்றிதழ் படிப்பும் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனம் வழக்கமான படிப்புகள் தவிர, திறன் பெற்றிடாத நபர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சிகளை இந்திய அரசு சுற்றுலா அமைச்சகத்தின் ‘‘ஹுனார்-சே–ரோஜ்கார் தக்–யோஜனா’’ திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு பயிற்சி அளித்து, ‘‘திறன் சான்று’’ வழங்குகிறது. இது வரை, **2380** நபர்களுக்கு இந்த நிறுவனம் பயிற்சி வழங்கியுள்ளது. அதில், பெரும்பாலானோர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

**சுற்றுலா வழிகாட்டி பயிற்சி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட, **“தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை–2023”** ஆவணத்தில், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சுற்றுலா பெரும் பங்கு வகிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில், அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை தற்பொழுதுள்ள 40 இலட்சத்திலிருந்து 150 இலட்சமாக உயர்த்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த சேவை அளிப்பதன் வாயிலாக, தேசிய மற்றும் பன்னாட்டு அளவில், தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் ஒரு தலமாக, மேம்பாடு அடைய முழு கவனம் செலுத்தப்படுகிறது.

சென்னையிலுள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், மதுரையிலுள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் மற்றும் சுற்றுலாத்துறையும் ஒருங்கிணைந்து 60 சுற்றுலா வழிகாட்டிகளுக்கு உலகத்தரத்தில், சுற்றுலா வழிகாட்டி

பயிற்சிகள் நடத்தப்பட்டன. இது தவிர, மேலும் ஒரு பயிற்சி வகுப்பு விரைவில் தொடங்கப்பட உள்ளது.

## சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள்

மாநில அரசு நிதியுதவி திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி ஓய்வுக்கூடங்கள், கழிப்பிட வசதிகள், இணைப்பு சாலைகள், உடை மாற்றும் அறைகள், வாகன நிறுத்துமிடங்கள், குடிநீர் வசதிகள் மற்றும் மின் விளக்கு வசதிகள் போன்ற சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கவும் மேம்படுத்தவும் சுற்றுலாத் துறை மூலம் ஒவ்வொரு ஆண்டும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**2014–2015 ஆம் ஆண்டு மாநில அரசு நிதியுதவி திட்டத்தின் கீழ் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த பின்வருமாறு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன :–**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தேனி மாவட்டம், போடி வட்டம், 'டாப் ஸ்டேசன்' பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 98.00 |
| 2. | தூத்துக்குடி மாவட்டம், சொக்கன் குடியிருப்பிலுள்ள அதிசய மணல்மாதா திருத்தலத்தில் ஓய்வுக் கூடம் கட்டுதல் | 30.00 |
| 3 | வேலூர் மாவட்டம், திருப்பாற்கடலில் உள்ள பிரசன்ன வெங்கடேச | 25.00 |

| | | |
|---|---|---|
| | பெருமாள் திருக்கோவில் பகுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | |
| 4 | புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் பகுதியில் சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல் | 10.00 |
| 5 | திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் மேலணை அருகிலுள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில், வனத்துறை மூலம் வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திரவனம் அமைத்தல் | 337.00 |
| | **மொத்தம்** | **500.00** |

**2014–2015 ஆம் ஆண்டு அரசால் ஒப்பளிக்கப்பட்ட பகுதி – II திட்டங்கள் பின்வருமாறு :–**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சென்னையில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளாக கட்டடத்தில் ஐந்தாவது தளம் கட்டுதல் | 102.00 |
| 2. | சுற்றுலா ஆணையரகம் மற்றும் மாவட்ட சுற்றுலா அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக, எல்காட் நிறுவனம் மூலம் 3 ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்புடன் 20 கணினிகள், மின் சேமிப்பு கலன் (UPS), 3 அச்சுப் பொறிகள் (Printers), 5 மின்பனுவலாக ஆக்கும் கருவிகள் (Scanners) மற்றும் மென்பொருள்கள் (Software) வாங்குதல் | 14.00 |
| 3 | திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை உவர்நீர் ஏரிப்பகுதியில் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் | 117.70 |
| | **மொத்தம்** | **233.70** |

**சுற்றுலாத் தலங்களை எளிதில் சென்றடைய ஏதுவாக, 2014–2015ம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட சாலை மேம்பட்டுப் பணிகள் பின்வருமாறு :–**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **ஈரோடு** மாவட்டம், சென்னிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு செல்லும் மலைச் சாலையை மேம்படுத்துதல் | 77.00 |
| 2 | **தூத்துக்குடி** மாவட்டம், கொற்கை ஸ்ரீவைகுண்டம் பஞ்சாயத்து சாலை மேம்பாட்டுப் பணிகள் | 62.25 |
| 3 | **புதுக்கோட்டை** மாவட்டம், விராலிமலையிலுள்ள திருவேங்கைவாசல் மற்றும் திருநல்லூர் சாலையினை மேம்படுத்துதல் | 376.00 |
| | **மொத்தம்** | **515.25** |

## இளைஞர் மற்றும் சாகச சுற்றுலா மேம்பாடு

சுமார் 1000 கி.மீ. நீளமுள்ள அழகிய கடற்கரை பரப்பைச் சார்ந்த தமிழ்நாட்டில் நீர் சாகச விளையாட்டுக்கள் மேம்பாட்டிற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பழவேற்காடு முதல் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முட்டம் கடற்கரை வரையில், நீர்விளையாட்டுகள் மற்றும் கடற்கரை சுற்றுலா நடவடிக்கைகளைச் செயல்படுத்தும் வகையில் உள்ள பல்வேறு இடங்களை மேம்படுத்த வாய்ப்புகள் உள்ளன. அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமாக கடலோரப் பகுதிகளிலுள்ள சுற்றுலா சிறப்பிடங்களான கோட்டைகள், கோயில்கள், தேவாலயங்கள், பறவைகள் சரணாலயங்கள் ஆகியவற்றை இணைத்து கடற்கரை சுற்றுலா மேம்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

கடற்கரை சுற்றுலாவைப் பிரபலப்படுத்தும் வகையில் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள, “மணப்பாடு” என்ற இடத்தில் பன்னாட்டு நீர்சறுக்கு (Surfing) விளையாட்டுகள் நடத்தப்பட்டன. சாகச சுற்றுலாவை

மேம்படுத்தும் வகையில் ராட்சச எரிவாயு பலூன்கள் (Hot-Air Ballooning) சாகச நிகழ்ச்சிகள் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சியில் நடத்தப்பட்டன. ஆண்டு தோறும், கோடைக் காலங்களில் ஏலகிரி மலையில் ‘‘பாராகிளைடிங்’’ சாகச நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டும் இதுபோன்ற நிகழ்ச்சிகளும், வேறு வகையான சாகச நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நடத்தப்படும்.

தமிழ்நாட்டில், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மலைகள் மற்றும் வனப்பகுதிகளில் வனத்துறையின் ஒத்துழைப்புடன் சுற்றுலாப் பயணிகளுக்கான மலைவழி நடைப்பயணம் (Trekking) நடத்தப்படும்.

### மருத்துவச் சுற்றுலா மேம்பாடு

மருத்துவச் சுற்றுலா வளங்கள் குறித்து தெரிவு செய்யப்பட்டு, குறைந்த பொருட்செலவில், உலகத் தரம் வாய்ந்த நிறைவான மருத்துவ வசதிகளை, சிறப்பு மருத்துவமனைகளின் ஒத்துழைப்புடன் கிடைப்பதை சுற்றுலாத் துறை முன்னிறுத்த உள்ளது.

தமிழ்நாட்டில், மருத்துவ சுற்றுலா வளங்கள் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. யோகா மற்றும் தியான முறைகள் தவிர, இந்திய மருத்துவ முறைகளான சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவம் ஆகியவை மேம்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு ஒரு ‘‘நலவாழ்வு மருத்துவ சுற்றுலா நடுவம்’’ என திகழ்கிறது.

## ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் சுற்றுலாத் திட்டங்கள் (தமிழ்நாடு சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம்)

ஆசிய வளர்ச்சி வங்கி வழங்கும் கடன் தொகையான சுமார் ரூ.450 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சுற்றுலா கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள, மத்திய அரசு தேர்வு செய்துள்ள நான்கு மாநிலங்களில் (பஞ்சாப், இமாச்சாலப்பிரதேசம், உத்தரகாண்ட், தமிழ்நாடு) தமிழ்நாடும் ஒன்றாகும். இதில், 70 விழுக்காடு ஆசிய வளர்ச்சி வங்கி கடன் உதவி மூலமும் (ரூ.315 கோடி), மீதமுள்ள 30 விழுக்காடு (ரூ.135 கோடி) மாநில அரசு நிதியில் செலவிடப்படும்.

சுற்றுலா கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் பின்வரும் இரண்டு முன்னுரிமைச் சுற்றுகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**1. கிழக்கு கடற்கரைச் சுற்று**

அ) ஆன்மீகம் மற்றும் பாரம்பரியச் சுற்று –காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது.

ஆ) படகுக் குழாம்களையும், உதகை ஏரிப் பகுதியையும் மேம்படுத்துதல்

**2. தென்பகுதி சுற்று (ஆன்மீகம் மற்றும் சுற்றுச் சூழல் சுற்று)**

புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள்

முதல் (Tranche-I) தொகுப்பில், திட்டங்களின் மதிப்பு **29.35** மில்லியன் அமெரிக்க டாலர்கள் **(ரூ.135 கோடி)** ஆகும். அதில், செயல்படுத்தப்படவுள்ள **16** துணைத் திட்டங்களுக்கு **ரூ.66.86** கோடிக்கு

ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இவற்றில் 6 துணைத் திட்டங்கள் செயல்படுத்திட பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதாவது,

(1) தரங்கம்பாடி டேனிஷ் கோட்டைப் பகுதியில் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் (ரூ.4.83 கோடிகள்)

(2) மின்சிக்கனத்துடன் கூடிய பாரம்பரிய தெரு விளக்குகளை 7 பெரிய சுற்றுலா நகரங்களில் வழங்குதல் மற்றும் அமைத்தல் (ரூ.18.49 கோடிகள்)

(3) சாலையோர நிழற்குடைகள், இருக்கைகள் 10 மிக பெரிய சுற்றுலா நகரங்களில் வழங்குதல் மற்றும் அமைத்தல் ( ரூ.1.95 கோடிகள்)

(4) வழிகாட்டி பலகைகளை 12 பெரிய சுற்றுலா நகரங்களில் வழங்குதல் மற்றும் அமைத்தல் (ரூ.3.84 கோடிகள்)

(5) நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்துதல் (ரூ.5.53 கோடிகள்)

(6) உதகமண்டலத்தில் புதிதாக பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் சுகாதார வளாகங்கள் அமைத்தல் (ரூ.3.19 கோடிகள்) ஆக மொத்தம் மேற்காணும் ஆறு திட்டங்களுக்கு ரூ.37.83 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதிகாரக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளின்படி, மீதமுள்ள திட்டப்பணிகளைத் தொடர்புடைய துறைகள் மற்றும் முகமைகளான நகராட்சிகள் நிர்வாக ஆணையரகம், பேரூராட்சிகள் இயக்ககம் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளன. ஒதுக்கப்பட்ட திட்டப் பணிகளைச் செயல்படுத்திட, அந்தந்த தொடர்புடைய துறைகள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பெரிய சுற்றுலாத் தலங்களிலும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் 30.6.1971 அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 54 தொடர் தங்கும் விடுதிகள் மற்றும் 17 சொகுசு பேருந்துகளுடன் செயல்பட்டு வருகிறது. சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மலைவாசத் தலங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகிறது. சில விடுதிகள் குத்தகைக்கு விடப்பட்டும் இதர விடுதிகள் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டும் வருகின்றன.

## உணவு விடுதிகள் பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் தொழில் நுட்ப வல்லுநர்களின் உதவியுடன் உணவு விடுதிகளை சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இணையதளம் மூலம் அறைகள் முன்பதிவு

செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, உலகின் எந்த பகுதியிலிருந்தும் எல்லோரும் இணையதளம் மூலம் மின்னணு முன்பதிவு செய்ய வசதிகள் செய்ய முடியும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில் தங்கும் சுற்றுலாப் பயணிகளின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில் பணியாற்றும் உணவு மற்றும் பானம் தயாரிக்கும் ஊழியர்களுக்கும், இதர சேவை புரியும் ஊழியர்களுக்கும் விடுதித்துறை நிபுணர்களைக் கொண்டு, வடஇந்திய உணவு வகைகளைத் தயாரிக்கும் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

சென்னை, அண்ணாசாலை ஓமந்தூரார் தோட்டத்தில் அமைந்துள்ள பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் உணவு தயாரித்து வழங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**படகு குழாம்கள்**

முட்டுக்காடு, முதலியார்குப்பம், பிச்சாவரம், ஏற்காடு, கொடைக்கானல், குற்றாலம், உதகமண்டலம்

மற்றும் பைகாரா போன்ற இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது.

முதலியார் குப்பம் படகு குழாமில் பயன்படுத்தும் வகையில் இரண்டு வாழைப்பழ வடிவிலான படகுகள் 2014-2015ல் வாங்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை இந்திய தொழில் நுட்ப கழக, தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட படகுகள் வாங்கப்பட்டு அவற்றின் தரநிர்ணயம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் ரூ.76.18 இலட்சம் செலவில், 81 படகுகள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், அனைத்து படகுக் குழாம்களிலும், படகு சவாரியின் போது சுற்றுலாப் பயணிகளுக்கு, ‘உயிர்காப்பு அங்கிகள்’ அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## போக்குவரத்துப் பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தன்வசமுள்ள 17 சொகுசு பேருந்துகளைப் பயன்படுத்தி அரை நாள் முதல் 14 நாட்கள் வரையிலான சுற்றுலாக்களை இயக்கி வருகிறது. சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 30க்கும் மேற்பட்ட சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து வருகிறது. மேற்குறிப்பிட்ட சுற்றுலாக்கள் தவிர, சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப, பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட சுற்றுலாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

## பொருட்காட்சிப் பிரிவு

சென்னை தீவுத்திடலில் 3–1–2015 அன்று 41–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி தொடங்கப்பட்டது. **“சுற்றுலா மற்றும் சமூக மேம்பாடு”** என்ற மையக் கருத்தைக் கொண்டு இந்த ஆண்டு கண்காட்சி அரங்கு அமைக்கப்பட்டது.

அனைத்து அரசு துறைகளின் சார்பில் மாநில அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை

வெளிப்படுத்தும் வகையில் கவர்ச்சிகரமான மாதிரிகளைக் கொண்டு பல்வேறு அரங்குகள் அமைக்கப்பட்டன.

இந்த ஆண்டு பொருட்காட்சியில், பறவைகள் கண்காட்சி, மீன்கள் கண்காட்சி, முப்பரிமாண காட்சி, குழந்தைகளுக்கான பொம்மை திரைப்படங்கள் மற்றும் அமர்நாத் கோவில் மாதிரி ஆகியவை புதிய சிறப்பு அம்சங்களாக அறிமுகப்படுத்தப்பட்டன.

சென்ற ஆண்டை ஒப்பிடுகையில், இந்த பொருட்காட்சிக்கு வருகை புரிந்தோரின் எண்ணிக்கை **11.68** இலட்சத்திலிருந்து **13** இலட்சமாக இந்த ஆண்டு அதிகரித்துள்ளது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வர்த்தக முயற்சிகள்**

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் மற்றும் சுற்றுலாக்கள் முன்பதிவிற்காக யாத்ரா.காம் / டிராவல் குரு, பெங்களூரு ஆகிய வலைத் தளங்களுடன் கூட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இதே போன்று, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் மற்றும் சுற்றுலாக்கள் முன்பதிவிற்காக ஸ்டேசில்லா.காம், சென்னை என்ற வலைத் தளத்துடனும் கூட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்துடனான கூட்டு ஏற்பாட்டின்படி, ஆண்டு முழுவதும் அக்கழக பணியாளர்கள் தங்குவதற்கு கன்னியாகுமரியிலுள்ள ஓட்டலில் தங்குமிட வசதிகள் அளித்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் ஏர் இந்தியாவுடனான கூட்டு ஏற்பாட்டின்படி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில், “விடுமுறை இல்ல வசதிகள்” மேற்கொள்வது தொடர்பான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை ஓய்வு வளாகத்தில் முன்னோடி நிறுவனங்கள் மூலம் கருத்தரங்குகள், பயிற்சி பட்டறைகள் நடத்துவதற்கு முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின்–ஆளுமை தொடர்பான முன்முயற்சிகள்

மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் பயணங்கள் மற்றும் விடுதிகளுக்கு இணையதள முன்பதிவு வசதியை முதன்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது. கடந்த 2004ஆம் ஆண்டு, ஜூலை மாதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். இந்த வசதி ஏற்படுத்தியதின் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாய் கணிசமான அளவு அதிகரிக்க உதவியது.

கடந்த 27 செப்டம்பர் 2012 அன்று, உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் மற்றும் பயணங்களுக்கு அலைபேசி மூலம் முன்பதிவு செய்யும் வசதியைத் தொடங்கி வைத்தார்கள். அதாவது, அனைத்து அலைபேசி இயக்குவோர் தொடர்புகள் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் மற்றும் பயணங்களுக்கு முன்பதிவு செய்துகொள்ள

பயனாளிகளுக்கு இந்த வசதி பெரிதும் உதவியாக அமைந்தது.

குற்றாலம் அலகு–I, குற்றாலம் அலகு–II, உளுந்தூர்பேட்டை, திருவண்ணாமலை, பழனி ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில், “இணையதளம் மூலம் அறைகள் முன்பதிவு செய்யும் வசதிகள்” நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் அனைத்து விடுதிகளிலும் இணையதளம் மூலம் வாடிக்கையாளர்களால் முன்பதிவு செய்ய முடியும். தமிழ்நாட்டுக்கு வெளியே புதுதில்லி, மும்பை, கொல்கத்தா, ஜெய்ப்பூர், ஆக்ரா, பனாஜி (கோவா), அகமதாபாத், ஹைதராபாத், பெங்களூரு, புவனேசுவரம் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய முக்கிய சுற்றுலா இடங்களில் அமைந்துள்ள சுற்றுலா அலுவலகங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளின் அறைகள் மற்றும் சுற்றுலாக்கள் இணையதளத்தின் வாயிலாக முன்பதிவு செய்யும் வசதிகள் விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளன.

சென்ற ஆண்டு ஈட்டிய ரூ.7.76 கோடியை விட 2014–15ஆம் ஆண்டில் இணையதள முன்பதிவு வசதி மூலமாக ரூ.10 கோடி வருவாய் ஈட்டி, 29 விழுக்காடு வளர்ச்சி அடைந்துள்ளது.

கடந்த ஆண்டு, 5 சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில் Wi-Fi இலவச இணையதள இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வசதி நடப்பாண்டில் ஒசூர் மற்றும் கிருஷ்ணகிரியில் உள்ள விடுதிகளில் நீட்டிக்கப்பட உள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சொகுசு பேருந்துகளில் Wi-Fi இணைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது. இது போன்ற வசதிகள் வெளிநாடுகளிலும் கூட இலவசமாக வழங்கப்படுவதில்லை.

## 2014–2015ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்ட மேம்பாட்டுப் பணிகள்

1. 35 இருக்கைகள் கொண்ட 2 குளிர்சாதன சொகுசு பேருந்துகள் மற்றும் 35 இருக்கைகள்

கொண்ட குளிர்சாதனமற்ற 3 பேருந்துகளும் ரூ.150.52 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

2. ஊட்டியில் உள்ள படகுக்குழாம் ரூ.500 இலட்சம் செலவில், கட்டடக்கலை நிபுணர்களின் உதவியுடன் அழகுற வடிவமைக்கப்பட்டு, நிலச்சீரமைப்பு செய்யப்பட்டு, தரம் உயர்த்தப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.
3. ஒசூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் ரூ.40.61 இலட்சம் செலவில், புதிய கருத்தரங்க அறை கட்டப்பட்டுள்ளது.
4. ஒகேனக்கல்லில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில், 17 அறைகள் ரூ.43.78 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
5. ஒகேனக்கல்லில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் உணவகம் கட்டுதல் மற்றும் மதுபானக் கூடம் புனரமைப்பு ஆகிய பணிகள் ரூ.14.26 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது.
6. குற்றாலத்தில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு (அலகு 2) விடுதியில் 12 அறைகள் ரூ.26.47 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

7. ஊட்டியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் 36 அறைகள் ரூ.94.63 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
8. ஊட்டியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியின் தாழ்வாரம் ரூ.22.37 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
9. ஊட்டி இளைஞர் விடுதியில் உள்ள பலர் துயில் கூடம் மற்றும் புதிய கட்டடம் ரூ.42.94 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
10. ஊட்டி தாவரவியல் பூங்காவில் உள்ள சிற்றுண்டி கூடம் ரூ.18.38 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.
11. ஏற்காட்டில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் 16 குடில்கள் ரூ.43.39 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
12. திருச்செந்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் 15 குடில்கள் ரூ.73.37 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

13. திருச்செந்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் ரூ.25 இலட்சம் செலவில் ஒரு மின்தூக்கி அமைக்கப்பட்டுள்ளது.
14. கொடைக்கானலில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் 36 அறைகள் ரூ.78.82 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
15. திருவண்ணாமலையில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் ரூ.19.07 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.
16. திருவண்ணாமலையில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் ரூ.42 இலட்சம் செலவில் புதிய உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.
17. ரூ.72.29 இலட்சம் செலவில் திருச்செந்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் 10 குடும்ப அறைகள் புதுப்பிக்கப்பட்டு, தரம் உயர்த்தப்படுவதுடன், அங்குள்ள கருத்தரங்க கூடம் மூன்று குடும்ப அறைகளாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

## 2015–2016ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பெரிய முன்முயற்சிகள்

1. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ், முட்டுக்காடு படகுகுழாம் மேம்பாட்டுப் பணிகள் ரூ.325 இலட்சம் செலவில் மேற்கொள்ள ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இப்பணிகள் ஓராண்டு காலத்திற்குள் நிறைவுபெறும்.
2. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ், முதலியார்குப்பம் படகுகுழாம் மேம்பாட்டுப் பணிகள் ரூ.145 இலட்சம் செலவில் மேற்கொள்ள ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இப்பணிகள் ஓராண்டு காலத்திற்குள் நிறைவுபெறும்.
3. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ், மாமல்லபுரம் கடற்கரை ஓய்வு வளாக மேம்பாட்டுப் பணிகள் ரூ.255 இலட்சம் செலவில் மேற்கொள்ள ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இப்பணிகள் ஓராண்டு காலத்திற்குள் நிறைவுபெறும்.

4. திருக்கடையூரில் ரூ.120 இலட்சம் செலவில் சுற்றுலா வளாகம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் நிறைவுற்றபின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.
5. இராமேசுவரம் ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில் ரூ.200 இலட்சம் செலவில் 21 அறைகள் கொண்ட கூடுதல் சுற்றுலா வளாகம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கட்டடப் பணிகள் மற்றும் இதர பணிகள் நிறைவுற்றபின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்
6. மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ், சென்னை, வாலாஜா சாலையில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள 5வது தளத்தில் உள் அலங்கார வேலைகள் ரூ.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

## நிதிநிலை செயல்பாடு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிதி நிலைமை கடந்த நான்கு ஆண்டுகளில் அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளோடு ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. அது குறித்த விவரம் பின்வருமாறு **:–**

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | வருவாய் | நிகரலாபம் |
|---|---|---|
| 2007-08 | 59.41 | 0.42 |
| 2008-09 | 70.25 | 2.25 |
| 2009-10 | 78.13 | 3.66 |
| 2010-11 | 92.72 | 2.64 |
| 2011-12 | 102.34 | 13.50 |
| 2012-13 | 106.59 | 16.26 |
| 2013-14 | 108.61 | 12.42 |
| 2014-15 | 105.98 | 3.91 |

2014–15ஆம் ஆண்டு நிகர இலாபம் குறைந்ததற்கு அதிக அளவில் சிறப்பு பழுதுகள் மேற்கொண்டதும், அரசு மானியத்தைக் கடனாக மாற்றியமையால் செலுத்தப்பட்ட வட்டித்தொகையே காரணங்களாகின்றன. இது வரிகட்டுதல் திட்டமாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக வரலாற்றில், முதன்முறையாக 2013–14ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட ஈவுத் தொகை ரூ.3.13 கோடி அரசிடம் வழங்கப்பட்டுள்ளது.

## நிறைவுரை

தமிழ்நாட்டிலுள்ள வழிபாட்டுத்தலங்கள், மலைகள், நீர்வீழ்ச்சிகள், வனங்கள், கடலோரப் பகுதிகள், வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்கள், கலை, பண்பாடு மற்றும் கலாச்சாரம் ஆகிய சிறப்புகள் அதிக அளவில் சுற்றுலாப்பயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கவும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும் உதவியாக உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள சாலைவழி, இரயில்வழி மற்றும் வான்வழி வசதிகள், சுற்றுலாப்பயணிகள் பாதுகாப்பு மற்றும் சுற்றுலா

நட்புணர்வு ஆகிய அம்சங்கள் மேலும் இதற்கு வலுவூட்டுகின்றன. தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவு வகைகள் மற்றொரு சிறப்பம்சமாக விளங்குகின்றது.

தமிழ்நாட்டில், டிசம்பர் மற்றும் சனவரி மாதங்களில் பல்வேறு சுற்றுலாத் தலங்களில் கலாச்சார அமைப்புகள் மூலம் நடத்தப்படும் ஏறக்குறைய 3000 கலைநிகழ்ச்சிகள், சுற்றுலாத்துறை விளம்பரங்களின் மூலம் சிறப்பிடத்தை எய்துகின்றன.

இதன் விளைவாக, **2014 ஆம் ஆண்டில், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இந்தியாவில் முதலிடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது.** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெளியிட்ட ‘‘தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை - 2023” ஆவணத்தில் அறிவிக்கப்பட்ட இலக்கை எட்ட ஏதுவாக, அதிகம் செலவழிக்கும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், “தமிழ்நாட்டிற்குச் செல்வோம்” என்ற விளம்பர முகாம்கள் நடத்தப்படும். இதன் மூலம் 2015–2016 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப்

பயணிகள் அதிக நாட்கள் அந்தந்த சுற்றுலாத் தலங்களில் தங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்துவதுடன், அதிக வேலைவாய்ப்புகள் பெருகவும், அதிக வருவாய் ஈட்டவும் இத்துறை வழி வகை செய்கிறது.

**எஸ்.பி. சண்முகநாதன்**
**சுற்றுலாத்துறை அமைச்சர்**